ஒருத்தன ஏமாத்தனும்னா... ஆசைய தூண்டனும்...

(MLM மோசடிகள்)

ஆசிரியர் : @EYegaa



ட்விட்டர் இழைகள்

ஒருத்தன ஏமாத்தனும்னா ஆசைய தூண்டனும்

EYegaa

பதிவிறக்கம் செய்ய -

http://FreeTamilEbooks.com/ebooks/mlm_scams

அட்டைப்படம் - லெனின் குருசாமி -

gurulenin@gmail.com

மின்னூலாக்கம் - லெனின் குருசாமி -

gurulenin@gmail.com

கணியம் அறக்கட்டளை (kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guruleninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushanmugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

பதிவிறக்கம் செய்ய - *http://freetamilebooks.com/ebooks/mlm$_{s}$cams*

This Book was produced using LaTeX + Pandoc

பொருளடக்கம்

தொகுப்புரை

''ஒரே ஒரு மீட்டிங் வாங்க. அப்பறம் உங்க லைஃப் ஸ்டைலே மாறிடும்.'' இப்படி உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாரேனும் உங்களைக் கூப்பிட்டால் அது ஒரு *MLM, Network marketing, direct marketing, binary scheme, pyramid scheme* அல்லது சுருக்கமாகச் சொன்னால் 'ஆள் சேர்க்கும் பிஸினஸ்' எனப் புரிந்து கொள்ளலாம். ஏதேனும் பொருட்களை விற்காமல் வெறும் முதலீடு என்பது மோசடியே. தற்போதைய சூழ்நிலையில் பெருகி வரும் சமூகவலைத்தள பயன்பாடுகளால் இதுபோன்ற பெயரில் மோசடிகள் எளிதாகக் கையாளப்படுகின்றன. ஈமு கோழி மோசடி நம் அனைவருக்கும் அறிந்ததே. கடந்த ஆண்டுதான் தீர்ப்பு வந்தது. குறைந்த முதலீட்டில் அதிக லாபம் என்ற விளம்பரத்தை நம்பி மக்கள் எளிதில் வலையில் விழுகின்றனர். தான் மோசடி வலையில் விழுந்தது இல்லாமல், தன்னைச் சுற்றியுள்ள நண்பர்கள், உறவினர்களையும் தள்ளி விடுகின்றனர். இது போன்ற மோசடிகளை வைத்து எடுக்கப்பட்ட படம் 'சதுரங்க

வேட்டை’ நல்ல வரவேற்பைப் பெற்றாலும் இன்னமும் மக்கள் தொடர்ந்து ஏமாரத்தான் செய்கின்றனர். கோவிட்-19 காரணமாகப் பலர் வேலை வாய்ப்பை இழந்துள்ளதைப் பயன்படுத்தி இதுபோன்ற மோசடிகள் பெருகி வருகின்றன. ஊரடங்கால் வீட்டிலிருந்தே சம்பாதிக்கலாம், தினமும் 2 மணி நேரம் வேலை செய்தால் போதும், கல்லூரி மாணவர்கள், இல்லத்தரசிகளுக்கு ஏற்றது என நம்முடைய சூழ்நிலையைப் பயன்படுத்தி புதுப்புது வழிமுறைகளில் மோசடிகள் அரங்கேறுகின்றன. தற்போது பிட்காயின் பெயரிலும் மோசடிகள் நடைபெறத் துவங்கியுள்ளன. பிட்காயின் பற்றி சரியான புரிதல் இல்லாமல் *pyramid* திட்டத்தின் மூலம் சில இலட்சங்களை முதலீடு செய்தால் பல இலட்சங்கள் கிடைக்கும் என்பன போன்ற திட்டங்களும் சுற்றி வருகின்றன. ட்விட்டரில் *@EYegaa* என்பவர் இதுபோன்ற மோசடிகள் எப்படி நடைபெறுகின்றன என்பதை விரிவாக எழுதியுள்ளார். பலருக்கும் அவருடைய பதிவு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பதால் அதனைத் தொகுத்து இந்த சிறு புத்தகமாக வெளியிட்டுள்ளேன். அவருக்கு எனது நன்றிகள்.

1. 1

சமீபத்தில bit coins சம்பந்தமா கால் வர ஆரம்பிச்சி இருக்கு, அப்போ தான் MLM nu சொல்லப்படற network marketing ஞாபகம் வந்தது. இதுல பாதிக்கப்பட்டு Suicide வர போன என் நெருங்கிய உறவு கிட்ட பேசினேன்...மனுஷன் பொங்கிட்டாரு. அவர் இன்னும் மூணு பேரு கிட்ட பேச opportunity குடுத்தாரு.

பேசினதுல கிடைத்த தகவலை ஒன்னு விடாம detailed ah எழுதுறேன்.

இது என் ஆத்ம திருப்திக்கு எழுதறேன். பெரிய thread… 4 parts… பொறுமையா படிக்கவும்

நீங்க உங்க உயிர் தோழன இல்ல உடன்பிறப்ப இல்ல நெருங்கிய சொந்தத்த ஏமாத்துவிங்களா? அவங்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்விங்களா…

ஒருவேளை நீங்க எதுனா network marketingல இருக்கீங்களா

... the more a new recruit invests in an MLM program, the more he or she loses.

Jon M.Taylor, Phd,
President, Consumer Awareness Institute



சத்தியமா முயற்சி செய்விங்க...

எப்படின்னு சொல்றேன்.

திடீர் ன்னு ஒருநாள் உங்க பழைய *friend* கிட்ட இருந்து *call* வருது, அட நம்மல இன்னும் நியாபகம் வெச்சிருக்காங்களேனு ஒரு குஷில பேசுறீங்க...செம்ம ஜாலியா போகுது பேச்சு. பழைய நினைவுகளை சந்தோஷமா அசைபோட்டு *call* கட் பண்ணியாச்சு

ஒரு பத்து நாள் கழிச்சு மறுபடியும் கால் அவங்ககிட்ட இருந்து வரும்

இந்த முறை வாழ்க்கை எப்படி போகுதுன்னு பேச்சு இருக்கும். நீங்க வேலையோ, பிசினஸோ, இல்ல வேலை தேடியோ, ஒரு நிலைல இருப்பீங்க. *Friend* கிட்ட லைட்டா புலம்புவோம்.
என்ன வாழ்க்கை டா இதுன்னு

அங்க ஆரம்பிக்கும் இவங்க விளையாட்டு

சரி நீ என்ன பண்ற அது சொல்லுன்னு கேட்போம். புலம்பலை எதிர்பார்த்த அவங்க சந்தோஷமா பேசுவாங்க, நான் சூப்பரா



இருக்கேன், “எனக்கு ராஜாவானா” னு தனுஷ் மாதிரி பாடாத குறை மட்டும் தான். நான் யாருகிட்டயும் வேல பார்க்கலன்னு சொல்லுவாங்க. அட பிஸ்னஸா ன்னு கேட்டா, தெய்வீக சிரிப்பு ஒன்னு கிடைக்கும்

அந்த பதிலுக்கு நீங்க காட்ட போற ஆர்வம்தான் அவங்க உங்கள நெருங்க முடிவுக்கான ஒரு கருவி. உங்க பதில வெச்சு *A,B,C* ன்னு மூனா பிரிப்பாங்க

A ஆர்வம், என்ன பண்ற, நானும் எதுனா செய்யணும்

B -ஓ! அப்படியா! அப்படினு கடந்துடறது

C என்ன? என்னமோ சொல்ற, விவரமா சொல்லு, எதுனா net-work marketing ah

C - நீங்க safe, உங்க கிட்ட வர மாட்டாங்க

B - hold, கொஞ்சம் பொறுமையா deal பண்ணுவாங்க

A- marked, நீங்க potential target…

இப்போ *A* - கிட்ட எப்படி *deal* பண்ணரங்க நு சொல்ல

போறேன்

இப்போ அவங்க *fb/wa status* உங்க கண்ணுல பட ஆரம்பிக்கும். அதுல

செம்ம சந்தோஷமா இருப்பாங்க..

Success after success

Car வாங்குவாங்க, இல்ல டீம் மேட் கார் *photos* இருக்கும். அவங்க என்ன பண்றாங்கனு ஒரு ஆர்வம் வரும்.

மெதுவா உங்களுக்கு *gud night message and positive gud morning message* வரும். நீங்க மெதுவா என்ன பிசினஸ் பண்ரனு கேட்பீங்க. *"Online la work", "my own business",* "எனக்கு எப்போ தோணுதோ அப்ப *work* செய்வேன்'

எவ்வளவு வருமானம்?

நான் என்ன *salary ya* வாங்கரேன், ஒரு மாசம் *30k*, இன்னொரு மாசம் *40k* இப்டி மாறி மாறி வரும்.

என்னனு சொல்லு, எப்படி *cash* வருதுனு கேட்டா டாலர் ல வரும், இங்க கன்வெர்ட் பண்ணிக்கணும்.

அதுக்கு *pan card, aadhar, passport* எல்லாம் தேவை.

நீ ஏன் இவ்வளவு கேள்வி கேக்கறன்னு கொக்கி போடுவாங்க.

நீங்க காட்ற ஆர்வம், அவங்களுக்கு பெரிய ப்ளஸ். உங்க *weakness* கேள்விகள் எல்லாம் *note* பண்ணிப்பாங்க

முதல் அடி அவங்க வைக்க மாட்டாங்க. உங்க ஆசையை தூண்டி விடுவாங்க. என்னடா இவ்வளவு ஆர்வமா கேட்குற? இப்போதைக்கு டீம்ல ஆட்கள் இருக்காங்க... அப்படினு அடிச்சு விடுவாங்க. அவங்க வாட்ஸப் *status*, அவங்க பேசற விதம், அவங்க *attitude*... உங்களுக்கு ஒரு *urge* உருவாக்கும். அதுவும் இல்லாம எங்க *senior* ஊருல இல்ல பார்க்கறேன் னு பட்டும் படாமல் பேசுவாங்க. திடீர்னு ஒரு நாள் *call* பண்ணி, எங்க *senior* ஊருக்கு வந்திருக்காரு, டீம் *ku* இன்னொரு ஆள் வேணும்னு கேட்டாரு, உன் *profile* பத்தி சொன்னேன், உனக்காக அவர மீட் பண்ணறேண்ணு சொன்னாரு அப்படினு சொல்லுவாங்க. உங்களுக்கு பெரிசா யோசிக்க *time* இருக்காது. வரும் போது *formal pant shirt, shoes* போட்டு, ஷேவ் பண்ணி *clean ah* வா, *appearance romba* முக்கியம்ன்னு சொல்லுவாங்க. பொதுவா அவங்க வர சொல்லற இடம் ஒரு பிரசித்தி பெற்ற காஃபி

ஷாப் இல்லனா பீட்ஸா ஷாப் மாதிரி இடம் தான். நீங்க போகும் போது, *senior* பத்தி பேச அரம்பிபங்க. *They call this edification.* அதாவது ஒரு பெரிய பிம்பத்தை பதிய வெய்பங்க. நீங்க உங்க நண்பரோடு பேசிட்டு இருக்கும் போது, ஒரு ஆளு வெளியேறுவாரு. அடுத்த அஞ்சு நிமிஷத்துல *senior entry* நடக்கும். அந்த கடைல அங்க சுத்தி உட்கார்ந்திருக்க பல பேரு அவங்க ஆளுங்கதான். *"Edification"* பண்ணிட்டுருக்கும் போது நீங்க கரெக்ட்டா ஒரு மாதிரி அதிசயமா பார்க்கும் அந்த வினாடி தான்

இந்த *game start* ஆகும்.

Senior வந்த உடனே நம்ம ஆளு செமயா பவ்யம் காட்டுவாரு. அது வர *geth*ஆ பார்த்த நம்ம *friend* பணிவு காட்டுவாரு. நமக்கு *senior* மேல பெரிய மரியாதை உருவாகும். *Senior* வந்து செம்ம *confident ah* கை குலுக்கி, எதுனா *Costly* யா *order* பண்ணுவாரு, உங்களுக்கும் சேர்த்து. அவர் கிட்ட எல்லாமே *branded. Watch, shoes, phone*ன்னு எல்லா விஷங்களிலும். என்னப்பா *diary* கொண்டு வந்தியான்னு கேட்டு, எழுத ஆரம்பிப்பார். முதல் வார்த்தை *GOD'S GRACE*

மெதுவா பேச *start* பண்ணுவாரு. உங்க வேலை, *financial situations* பத்தி கேட்பாரு. மெதுவா பிஸினஸ் பத்தி பேச ஆரம்பிப்பாங்க. அங்க பேசறதுலாம் கேட்டா நட்சத்திர ஜன்னலில் மாதிரி தான்



...

இது சம்பந்தமா நான் பேசின நாலு *victims* கிட்டயும் தெரிஞ்சிக்கிட்டது - பிசினஸ் பேரு கடைசி வர சொல்லல.. இவங்களும் பெரிசா கேட்கல, ஒரு மாதிரி எல்லாம் புரியுது ஆன

புரியல மாதிரி

அதாவது நீங்க இத செய்யணும்ன்னு மனசுல ஒரு வெறி வரும். அப்போ தான் மெதுவா *investment* பத்தி சொல்லுவாரு. எதே *investment ah* அப்படினு, இதுவரை சொல்லவே இல்லயே அப்படினு பதற்றம் வரும். என்ன இதுகூட இல்லனா எப்படி பிசினஸ்? ன்ற மாதிரி அவங்க உங்களை பார்ப்பாங்க

மனசுல சபலம் வந்தாச்சு...பேராசை வந்தாச்சு...அவங்க வேலை இப்போதைக்கு முடிஞ்சுது. உங்க ப்ரெண்ட் "எதுவா இருந்தாலும் நான் இருக்கேன், என்ன நம்பி வா, நான் பார்த்துக்கறேன்" அப்படினு குடுக்கற அபார நம்பிக்கை குடுப்பாரு. இனி நடக்க போற விபரீதம் உங்களை எப்படி முழுசா முழுங்குராங்கனு அடுத்த த்ரெட்ல சொல்றேன்

1. இன்வெஸ்ட்மெண்ட் எப்படி

2. உங்கள சுத்தி பின்ன படற வலை


#Kamal
SRIRAM SIVA
yethachum purinjatha ?
Sri
#We
oru ezhavum puriyala !
yen kekuringa
unaku purinjathu na
nan Vera tweet yosikanum

…

3. உங்க ப்ரெண்ட் உங்களுக்கு துரோகி ஆகுரது

4. *Upline downline tortures*

2. 2

போன *thread* ல பணம் இன்வெஸ்ட் பண்ணின அப்பறம் நடைபெறும் சம்பவங்ளை சொல்றேன்னு நிறுத்திருந்தேன். ஆனா, அதுக்கு முன்ன என்ன சொல்லி உங்களை *invest* பண்ண தூண்டுறாங்க, என்ன சொல்லி மனசுல சபலம் உண்டாக்குறாங்கனு சொல்றதும் முக்கியம்னு தோணிச்சு. அதனால கொஞ்சம் *delay.* அவங்க சொல்ற கதை ரொம்ப பெரிசு

சோ இந்த *thread* ம் கூட கொஞ்சம் நீளம். மன்னிக்கவும்.

1 st பேசுற விதம்

அவங்க முதல்ல என்ன பதிய வைப்பாங்கன்னா இது *legal & ethical business.* இதுல ஆதார் இருக்கா , *pan card* , *passport* இருக்கா அப்பதான் *join* பண்ண முடியும்னு சொல்வாங்க. *Pan card* எதுக்குனு நீங்க கேள்வி கேட்டா *US DOLLORS* ஆ வரும் உங்க *earnings* எல்லாம் *bank transaction* மூலமா *convert* பண்ண வேண்டாமான்னு பதில் வரும். சேரி, ஆதார் கார்டு எதுக்குன்னு கேட்டா *bond agreement*


THE GREAT G
MAGIC S

...

போடனுமேன்னு கேட்டு அசத்துவாங்க. *So* அப்பவே உங்களுக்கு *50%* நம்பிக்கை வந்திரும். நம்ம மனசுக்குள்ள "ஓஹோ அப்ப நாம தப்பான வேலை எதுவும் செய்யலனு தானாவே பதியும். மூணாவது பாஸ்போர்ட் , அது எதுக்குங்க ? பின்ன என்னங்க வருஷத்துக்கு 2 டைம் வெளிநாட்டுல மீட்டிங் நடக்கும் அதுக்கு போகவேணமா!!!

இப்ப *foreign* ஆசை தூண்டியாச்சா! பாஸ்போர்ட் இல்லைனாலும் பரவால்ல. நீங்க *join* பண்ண 2 மாசத்துல *apply* பண்ணி வாங்கிடுங்கனு சொல்வாங்க.

அடுத்து அவங்க பண்ண போறது ரொம்ப முக்கியமான ஒண்ணு.

உங்க *dreams*... அதுல விளையாட *start* பண்ணுவாங்க..

இதுல முதல்ல அவங்க கை வைக்கிறது உங்க வேலை முறை பற்றி...

இப்போ நீங்க செய்யும் வேலையால உங்களால வாழ்க்கைல மேல வரமுடியாது.


நல்ல வாழைப்பழம் மாறி பேசு

...

இந்த பிஸினஸ்ல நீங்க எவ்ளோ மேல போலாம்னு பேசுவாங்க. அதுக்கு *poverty* லைன் *prosperity* லைன் ஒண்ணு வரைவாங்க. அதாவது *poverty line :* ஒரு நாள் சம்பளம் *30 Rs.*

prosperity line : ஒரு நாள் சம்பளம் *9.25* லட்சம்.

நீங்க இப்போ பார்டி லைன்னுக்கு கொஞ்சம் மேல அவ்வளவு தான், நீங்க மனசு வெச்சா எப்படி சில மாசங்களுக்குள்ள *prosperity* நோக்கி நகருவிங்கன்னு சொல்லுவாங்க

ரெண்டாவது என்ன விஷயம்னா

மக்கள *4* பிரிப்பாங்க.

Left side:

அன்றாடங்காட்சி/ தினக்கூலி

மாத சம்பளம் / சிறுவணிகர்கள்

Right side :

பெரிய *investers*

பெரிய தொழில்அதிபர்கள்

இப்ப ஆரம்பிக்கும் போதே லெஃப்ட் சைட்ல நீங்கல்லாம்

இருக்கீங்கங்கள்லனு ஆரம்பமே இருக்கும்.


உங்களயும் வலது பக்கம் இருக்க வசதியா இருக்கவங்கலோட *compare* பண்ண ஆரம்பிப்பாங்க.

இப்ப சிறுவணிகர்கள்/ மாத சம்பளத்துக்கு வேலை பாக்குறீங்கன்னா உங்களுக்கு நினைச்ச நேரத்துல லீவ் எடுக்க முடியுமா, உங்களால் ஒரு விஷயம் பண்ண முடியாம போறப்போ எவ்ளோ *feel* பண்ணுவீங்க? உங்களால் ஒரு விஷயம் பண்ண முடியாம போறப்போ எவ்ளோ *feel* பண்ணுவீங்க. ஆனா அவங்கள பாருங்க

உங்களுக்கு எல்லாத்துலயும் *why*னு கேள்வி இருக்கும் ஆனா அவங்ககிட்ட *how* னு இருக்கும்
உங்களுக்கு மாசம் பொறந்தா வர சம்பளம் தான் ஒரே குறிக்கோள் ஆனா அவங்களுக்கு மனசுல இருக்குறது *delayed gratification*

Delayed gratification னா என்னனு சொல்லுவாங்க

இப்ப ஒரு மால் கட்டுறவங்களுக்கு பாத்தீங்கன்னா


L
R
E
B
S
I
97%
3%
4%
96%

எடுத்ததுமே முதல் *return* ஆகாது. அவங்க 5 வருஷம் கழிச்சு தான் எடுப்பாங்க. ஆனா எடுக்க ஆரம்பிக்கும் போது நீங்க நினைக்கறதவிட ரொம்ப பெருசா இருக்குனு சொல்லி நம்ம உள் மனசுக்குள்ள மெதுவா

ச்ச நாம இப்ப வாழுறது எல்லாம் வாழ்க்கையே இல்லனு பதிச்சுருவானுக.

அடுத்து இந்த பிஸினஸ்னால எப்படிலாம் *income* வரும்ன்ற பேராசைய தூண்டி விடுவாங்க. இப்ப நீங்க இதுக்குள்ள வரும்போது *investment* னு கொண்டு வர பணத்துக்கு ஈடா உங்களுக்கு இவ்ளோ *unit values* குடுப்போம். *UV* அப்படினா? நீங்க இப்ப இவர் மூலமா வறீங்கன்னா உங்களுக்கு இவ்ளோ *UV points* கிடைக்கும், உங்களுக்க்கு கீழ ஆள் வரப்போ இன்னும் *points* கூடும். அவன் போட்டு வச்ச மேப்ல ரைட் சைடு உங்களுக்கு பாயிண்ட் ஏறிகிட்டே போகும். இவ்ளோ *point left right match* ஆகுறப்போ உங்களுக்கு இவ்ளோ பணம் வரும்.

அவன் போடுற கணக்குல சத்தியமா உங்களுக்கு நஷ்டம்குறத



நினச்சு கூட பாக்க முடியாது. 3-6 மாசத்துக்குள்ள நீங்க போட்ட காச எடுத்துருவீங்க, 5-6 வருஷத்துல பெரிய கோடீஸ்வரணா மாறிடுவீங்க, சொஸைட்டில பெரிய ஆளா மாறிடுவீங்கன்னு கம்பி கட்டுர கதை எல்லாம் சொல்வாங்க.

இப்ப உங்களுக்குள்ள ரெண்டு விஷயத்த தூண்டி விட்டுருக்காங்க

ஒண்ணு : வெளிநாடு போலாம்ன்ற ஆர்வம்

ரெண்டு : இப்ப நீங்க வாழ்ந்துட்டு இருக்குற வாழ்க்கை ஒண்ணுமே இல்ல, என்னால பெரிய சாதனையாளரா மாற முடியும்ன்ற ஒரு நம்பிக்கை.

இந்த ரெண்டு சாத்தானும் ஏவியாச்சு. இப்போதைக்கு அவங்க சோலி முடிஞ்சு

இங்க நீங்க புத்திசாலி தனமா சில கேள்விகள் மடக்கி கேட்டா ஒரு மாதிரி உங்கள கூட்டிட்டு வந்த ஆள லுக்கு விட்டு " கேளுங்க கேளுங்க என்ன வேணுமொ கேளுங்க சொல்றேன்"னு அவனுக காட்டுர பாவ்லால நமக்கு நாம கேள்வி கேட்டா எங்க


CBFC - "U"

...


சோலி முடிஞ்ச்........

...

இந்த வாய்ப்பு கிடைக்காம போயிடுமோனு தோண வைக்கும். நீங்க கெளம்பும்போது உங்க *friend* வந்து நான் இருக்கேன்டா பயப்படாதனு சொல்ற நம்பிக்கையான வார்த்தை. இதுதான் நா போன *thread*ல சொன்ன நம்பிக்கை *point*. இனி தான் வேட்டை ஆரம்பம்...

3. 3

முதல்ல சொன்ன மாதிரி இது கொஞ்சம் அழுத்தத்த உருவாக்க போற இழை.

சுலபமா எழுத முடியல.

Upliner ன்னு இருக்க போற உங்க ப்ரெண்ட் *downliner* ஆகா இருக்கும் நீங்க. சிக்கி சின்னாபின்னமாக போற உங்க வாழ்கை, கனவு, நம்பிக்கை எல்லாம் பேசியாகணும். என்னதான் நடந்திடும்? ஜெயிச்சா பத்து மடங்கு அதிகமாக வரும் இல்லனா இரண்டு வருஷம் கஷ்டப்பட்டு உழைச்சா அடைச்சிடலாம். இப்படி எதுவுமே முயற்சி செய்யாம வாழறதுக்கு இது எவ்வளவோ மேல் அப்படின்னு நெனச்சு பணம் புரட்டியாச்சு. இதுல குடும்ப பெண்கள், மிக சாதாரண வேலை செய்யும் பசங்க, 40+ ஆளுங்க தான் நிறைய சிக்கறாங்க.

பணம் வீட்டுக்கு தெரியாம ஏற்பாடு பண்றீங்க அப்படினா இன்னும் வசதி அவங்களுக்கு. சரி விஷயத்துக்கு வரேன். பணம்

புரட்டிட்டீங்க, நல்ல நாள் நேரம் பார்த்து அவங்க கிட்ட குடுக்கறீங்க. சூப்பர் மா, இனி உங்க *upliner* சொல்றத மட்டும் செஞ்சா போதும். உங்க கீழ பெரிய டீம், பணம் எல்லாம் இருக்கும். உங்க ஆர்வம், உங்க திறமை உங்கள சீக்கிரம் மேல கொண்டு போகும் அப்படினு சொல்வாங்க. இதுல கவனிக்க வேண்டியது, அடிக்கடி *upliner* சொல் படி நடக்கணும் அப்படினு அவங்க சொல்லறது.

இனி ப்ரெண்ட் *ngra* வார்த்தைய தூக்கி குப்ப தொட்டில போடுங்க, துரோகி இல்லனா *upliner nu refer* பண்ணலாம்.

I might sound rude. But it's an undeniable fact. Thread முடிவுல உணர்வீங்க. *First one week* ல *welcome nu* ஒரு *meeting* நடக்கும். இது மூணு - நாலு முறை நடக்கும். ஒரு *hotel* ல நடத்துவாங்க. செம்ம *planned* ஆ இருக்கும். *Formals la* போகணும். *Program start* ஆகரதுக்கு முன்னாடி போயிடணும். உங்க *upliner* உங்க கூட வாசல் வரை வந்து உள்ள அனுப்புவாரு. உள்ள போனதும்,

உங்களை எல்லாரும் *good morning nu* சொல்லித்தான் பேச *start* பண்ணுவாங்க. ஏன் தெரியுமா, அங்க இருக்கிறவங்க வாழ்க்கைல

இனி இருளே இருக்காதாம்.

அறிமுக படலம் நடக்கும். அது உங்க முதல் வாரம் *ah* இருந்தாலும் சரி, மூணாவது வாரம் *ah* இருந்தாலும் சரி.
இது உங்க முதல் வாரம்னா, பிரமிப்பா பார்ப்பிங்க

ஏன்னா பணம் போட்டாலும் செஞ்சது சரியான்னு ஒரு படபடப்பு இருக்கும் தானே
ஆனா அங்க நிறைய பேரு இருக்குறது பார்த்ததும் ஒரு தைரியம் வரும்
முதல்ல கனவுகள் பத்தி பேசுவாங்க

ஏப்படி நீங்க எடுக்கற முடிவு உங்க *future ah* மாத்தி போடுது ஒரு பணக்காரன் யோசிக்கரதுக்கும் ஒரு சாமானியன் யோசிக்கரதுக்கும் என்ன வித்தியாசம்?
பணக்காரன் எப்படி *wealth* உருவாக்குரதுன்னு யோசிப்பான், ஆனால் நீங்க எப்படி பணம் சம்பாதிக்கரதுன்னு யோசிப்பிங்க!

அப்போ திடீர்னு பரபரப்பு ஆரம்பம். நம்ப அண்ணன் வராருன்னு சொல்லி எல்லாரும் எதோ ரஜினி வர மாதிரி ஆர்வம்,



...

பணிவு எல்லாம் காட்டுவாங்க. *Bgm* தெரிக்கும், *slideshow* போகும் *(நிஜ வாழ்க்கைல slow motion la* நடக்க முடியாது...முடிஞ்சா அதும் பண்ணுவாங்க) அண்ணன் இப்போ *mic* எடுப்பாரு.

Good morning nu சொல்லிட்டு கொஞ்சம் நேரம் அமைதியா உங்களைலாம் பார்ப்பாரு.

கொஞ்சம் மாசம் முன்னாடி நான் உங்களை மாதிரி அங்க இருந்தேன்... *Gods Grace,* இப்போ எனக்கு பெரிய டீம். சந்தோஷமா வாழ்கை. எல்லாம் இந்த பிசினஸ் னால தான். என் கனவு நிறைவேற காரணம் இந்த பிசினஸ் தான். காட்டுல ஒரு சிங்கம் இருந்துச்சாம், அப்போ ஒரு முதலை கிட்ட போய், என்ன சொல்லிச்சாம்ன்னு... கம்பி கட்டற கதைலாம் சொல்லுவார் அந்த அண்ணன். பேசி பேசி உங்க மனசுல ஒரு வெறி உருவாக்குவாங்க. இப்போ இந்த *business la* முழுசா உள்ள வரதுக்கு முன்னாடி, சில விஷயங்கள் செய்யணும்.

முதல்ல உங்க கனவுகள *A, B nu* பிரிக்க சொல்வாங்க.

நிற்க...முக்கியமா நான் *tension* ஆன இடம் இது தான். இப்போ நடக்க போற *psychological impact. Network marketing la* சிக்கின


kambi katra kadhai yella iluthu
podranga parunga 😂😂
*Me
Tanu Meme's

…

உங்க ப்ரெண்ட்/உறவு கிட்ட நீங்க "வேண்டாம் இல்ல இது சரி இல்லன்னு" நீங்க சொல்லும் போது, உங்க கிட்டர்ந்து விலகி போறாங்க

இல்ல என்ன பண்ணரோம்ன்னு உங்க கிட்ட சொல்லாம விலகராங்க... காரணம் இப்போ அவங்களுக்குள்ள இருக்க *pyschological changes. Brain conditioning.*

Brain conditioning na enna?

(Brain conditioning - This is the essence of your habit, the conditioning of your brains pattern of thinking, feeling or acting, so that it is second nature.)

வடிவேலு சொல்ற மாதிரி, என் *mind* உன் *friend* ஆகிடுச்சுப்பா

மூளை சலவை சரியான வார்த்தையா? *Coming back, A dreams* னா என்ன?

இதெல்லாம் செய்யாம சாக கூடாது. இதுதான் என் வாழ்க்கைல பெரிய விஷயம்

(வீடு கட்றது, கார் வாங்கறது, வில்லா கட்டுறது, இப்படி)

B dreams - இதுலாம் செஞ்சிடனும்!

(அம்மாக்கு புடவை வாங்கறது, *bike* வாங்கறது, தங்கைக்கு நகை செய்யறது, இத்யாதிக்கள்)

Minimum 5 A dreams 15 B dreams எழுதணும். யோசிச்சு பாருங்க, 5 பெரிய *dreams* உங்களுக்கு இருக்குமா? இப்போ எழுத ஆரம்பிக்கும் போது, உருவாக்குவீங்க, (இந்த சமயத்துல சீக்ரெட் *nu* ஒரு *book/ YouTube link*) படிக்க/ பார்க்க சொல்லுவாங்க. இது ஒரு நல்ல *book* தான்,

ஆனா, *intention matters*

இது சொல்ல வர விஷயம், ஒரு எண்ணத்த மனசுல முழுசா நெனச்சா அது நிறைவேறும். (யானைல எவ்ளோ சிறப்பு இருந்தாலும்) அதுல நமக்கு தேவையானதை *use* பண்ணிப்பாங்க. நீ முழு மனசா ட்ரீம் பண்ணு, நடக்கும். எண்ணம் போல் வாழ்க்கை □□

அடுத்து *" rich dad poor dad"* , கியோசகியின் அசர வைக்கும் *book. Life ah* அணுகற *attitude. Semma book,* வழக்கம் போல


இங்கேயும் தில்லாலங்கடி வேலை நடக்கும். நீ வாழ்க்கையை எப்படி அணுகனும் *nu use* பண்ணுவாங்க.

இப்போ உங்க ட்ரீம் *book ah* உங்க *upliner* எடுப்பாரு ஒவ்வொரு ட்ரீம் *ah correction* செய்வாரு, பெரிய ஆளு மாதிரி யோசி. இது என்ன சின்ன புள்ளத்தனமா ஸ்கூட்டி வாங்கணும்னு போட்டிருக்க *BRAND* ல பேசு. என்ன இது *samsung mobile?iphone !*நீ இன்னும் பிசினஸ்க்கு *ready* ஆல போலருக்கேன்னு ஏத்தி விடுவாங்க

(ஒருத்தர் அவங்க ட்ரீம் லிஸ்ட் காட்டினாங்க, அவங்க ஆசையா எழுதின கனவுல, இந்த மானங்கெட்ட upliner அடிச்சிட்டு ட்ரீம்ல class இல்லனு மாத்திருக்கான்) எனக்கு அழறதா இல்ல சிரிக்கறதானு தெரியல

So dreams r achievable, should be classy, u should dream a lot மூணும் *mind*ல தங்கிடும்.

அடுத்து, *"who stole the American dreams"*பணக்காரன் ஆக தில் இருக்கா *(tag line)* இதுல எப்படி உன் *dreams* நோக்கி நீ போகனும் எப்படி மத்தவங்க விமர்சனத்த புறம் தள்ளிட்டு மேல போகனும் *nu*


CELEBRATING
20 YEARS
AS THE #1 PERSONAL
FINANCE BOOK
OF ALL TIME
What the Rich Teach
Their Kids About Money
–That the Poor and
Middle Class Do Not!
RICH
DAD
POOR DAD
WITH UPDATES FOR TODAY'S WORLD
– AND 9 New Study Session Sections

itbit வாங்கணும் ரோமி

~~Tvs~~ Vespa Red c

– ~~Entorque Red colour~~

Paper black வாங்க வேண

பழைய வண்டிய கொடுத்துட்டு

ண்டியா வாங்கணும்.

மாற்றி வண்டு

deal பண்ணும

அடுத்து *"the business school" , again Robert Kiyosaki"* இதுல நீங்க அடுத்தவங்களுக்கு பண்றது பேரு *help nu* பதிய வைக்கும்.


Tag line "for people who like helping people".
So, உங்க மனசுல நம்ம இந்த *business ku* கூட்டிட்டு வர போறது அவங்களுக்கு செய்யுற *help nu* தோணும்.


Next, "The parable of the pipeline" , Bruke Hedges , இதுல *residual income nu* சொல்லப்படுற எஞ்சிய வருமானம், அத வெச்சு எப்படி பணம் பண்ணலாம் *nu* இருக்கும்.
சோ, வேலை ய விடாம, இதையும் செய்யலாம்னு ஒரு ஐடியா வரும்.


கடைசியாக *network marketing* தொழிலின் வெற்றி உத்திக்கள்- கேள்விகளே பதில் ஆகும்.

FAQ மாதிரி, என்னவெல்லாம் கேள்வி எழும், அதுக்கு எப்படிலாம் பதில் சொல்லணும் *nu* இருக்கும்.

சரி, இப்படி *books books ah* படிக்க வைக்க வேற ஒரு நோக்கமும்


WHO STOLE
THE AMERICAN
DREAM?
Burke


NEW EDITION!
RICH DAD
From the Authors of the #1 New York Times Bestseller Rich Dad Poor Dad
THE BUSINESS SCHOOL
SECOND EDITION
FOR PEOPLE WHO LIKE HELPING PEOPLE
Robert T. Kiyosaki
The Author of Rich Dad Poor Dad


THE
PARABLE
OF THE
PIPELINE
How Anyone Can Build A Pipeline Of
Ongoing Residual Income In The New Economy
BURKE

இருக்கு.

இதுலாம் முடிக்க 25 நாட்கள் ஆகும்.

அப்பறம் தான் *agreement ah* கண்ணுல காட்டுவாங்க.

அதுல 30 நாட்களுக்குள்ள வேண்டாம் *nu* சொல்லிடா உங்க பணத்த திரும்ப தர கூடிய வசதி இருக்கு. *But 5* நாலுல அந்த விஷயத்தை உணர்ந்து, சுதாரிச்சு நீங்க கேக்குறதுக்குள்ள *dates* முடிஞ்சிடும்


பல நேரம் அந்த தேதி முடிஞ்ச பின்னாடி தான் *agreement* கண்ணுல காட்டுவாங்க..

நீங்க இது ப்

புரியாம ரெண்டாவது மாசம் போய் கேட்டா., ஒரு பிசினஸ்மேன் மாதிரியே நீ யோசிக்க மாட்டியா.. *agreement* லாம் படிக்க பாட்டியா தங்கம் னு நக்கலா பாப்பாங்க

Meetings பத்தி திரும்ப போவோம்.

Saturday - 3 weeks ku welcome, அப்புறம்


நெட்வொர்க் மார்க்கெட்டிங் தொழிலின் வெற்றி உத்திகள்
இப்புத்தகம் முன்பு
கேள்விகளே பதிலாகும்
என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது
ஆலன் பீஸ்



…

வாரா வாரம் ரெண்டு பெரிய மீட்டிங் அந்த *Daily POA nu* ஒரு மினி மீட்டிங்.

Sunday அன்னைக்கு ஒரு *meeting,* பெரிய *marrige hall* ல, போன உடனே பாட்டு டான்ஸ்*nu* அதகள படும். எல்லாரும் டான்ஸ் ஆடுவாங்க,. வழக்கம் போல, வித விதமா, கலர், கலர் ஆ ரீல் விட்டு, ஒரு பெரிய தலய வர வெச்சு, புது *bottle,* பழைய சரக்கு னு ஒரு *euphoria* வரும்.

அது வெச்சு *Monday* ஓடிடும்

Tues உங்களுக்கு பழைய மாதிரி, *doubt start* ஆகும் போது *Wednesday* அடுத்த *mini meeting,* இப்போ சில வெற்றி கதைகள் வர போற *opportunities*

இதை வச்சி ரெண்டு நாள் ஓடிடும் மனசு. சோ *cycle la conditioning* பண்ணிகிட்டே இருப்பாங்க

இது இல்லாம *POA* ன்னு *weekdays* நடக்கும். இப்போ *30* நாள் ஆகிடுச்சு, *honeymoon period over.*

இப்போ *poa la* உங்களுக்கு மரியாதை வேற லெவல்ல

இருக்கும்.

மானங்கெட்ட பொழப்புன்னு ஒன்னு இருந்தா இது தான். உங்க சுற்றத்துல இருக்கிறவங்களை

மூணு செட்டா பிரிக்க சொல்வாங்க.

Hot, warm, cold.

Hot- close friends, உறவு

Warm - தெரியும் *but* அவ்ளோ *close* இல்ல

Cold- பேசி காலம் ஆச்சு

Hot தான் இப்ப நம்ம *full focus.* அவங்ககிட்ட எப்படி பேச்ச ஆரம்பிக்கணும்னு சொல்லுவாங்க. *POA* ல *training* நடக்கும். நீங்க பேசறதுக்கு முன்ன, தயார் ஆகிட்டிங்களான்னு *check* பண்ண *mock calls* நடக்கும்.

சரியா பண்ணலனா திட்டு விழும். இப்போ நீங்க ஒரு ப்ரெண்ட் *ku call* பண்ணுவீங்க, உங்க ப்ரெண்ட் கொஞ்ச நாட்களுக்கு

முன்னாடி பண்ணின அதே *call, adhe* வார்த்தைகள், இப்போ நீங்க சொல்லுவீங்க. *But* இப்போ ஒரு ரியாலிட்டி, புரிஞ்சிப்பீங்க, நீங்க பேசுறது எல்லாம் உங்க *upliner* கேட்டுட்டு இருப்பாங்க. ரெக்கார்ட் *option* போட்டு தான் பேசணும்

இனி நடக்குறது பொம்மலாட்டம் மட்டும் தான்

(இப்போ *first thread* படிச்சா புரியும், நீங்க உங்க *friend* க்கு துரோகம் பண்ணுவீங்களானு கேட்ட கேள்வி!)

இதுல இருந்து மீளனும்னு நீங்க யோசிக்கும் வரை, உங்கள் வாழ்க்கை உங்க *upliner* கைல.

நீங்க யாரு கிட்ட பேசணும், என்ன பேசணும், எப்படி நடக்கணும், என்ன *dress* போட்டுக்கணும் எல்லாமே அவங்க முடிவு தான்.

இதை எல்லாம் முடிக்கலாம். ஒன்னு சொல்லி. *Network marketing* தான் இனி *future nu* சொல்லுவாங்க

இப்போ ஒரு *online coding class for kids* க்கு எடுப்பாங்க

அவங்க கிட்ட எதுக்குங்க இதெல்லாம்னு கேட்டா எதுனா பேப்பர்ஸ் காட்டி *20* வருஷம் கழிச்சு ரோபோட்டிக்ஸ் தான் வாழ்க்கைனு சொல்வாங்க. *Apo* மத்தவங்கலாம் செத்துடுவாங்களா? இல்ல வேற தொழில் இருக்காதா?

இயற்கை, *balance* பண்ணி தான் கொண்டு போகும்.

ஒரே அடியா எந்த ஃபீல்டும் மேல வராது.

புரியாம பண்ணுற *investment is a sin.*

உழைக்காம கோடிகளை அள்ள முடியாது. *Product eh* இல்லாம எப்படி வருமானம் வரும்..

இது மேல இருக்க *200* பேரு சம்பாதிக்க *20000* குடும்பம்

Idhu mela Iruka 200 peru அவதிபடுற கொடுமை

நான் பேசின *5* பேருகிட்டயும் பார்த்தது ஒன்னு. பண நஷ்டம் அவங்கள பாதிச்சத விட, மனசளவுல அதீத கற்பனை இப்போ வாழற வாழ்கை கொடுமை *nu* பதிஞ்சிடுற உணர்வு

பணம் விட மனம் தான் வெச்சு செய்யுது..

ஒரு *investment,* உங்களுக்கு புரியல, இல்ல தப்புனு உள்ளுணர்வு சொல்லும் போது... மதிப்பு குடுங்க

யாராவது இன்வெஸ்ட் பண்ணி ஒரு மாதத்துக்குள்ள இருந்தா *, please save your life, refund* வாங்குங்க... *30* நாள்க்குள்ள இருந்தா கண்டிப்பா வாங்கலாம். *Agreement* படிக்காம இருந்தா எடுத்து படிங்க.

இன்னும் தராம இருந்தா வாய் விட்டு தைரியமா கேளுங்க.. நொண்டி சாக்கு சொல்லி தாமதிச்சா அப்பவே உங்களுக்கு புரியும்.. உடனே திருப்பி கேளுங்க.. அவங்க சுயரூபம் தெரியும்

ஆரம்பத்துல எழுதனும்னு தோனிச்சு, பட் பாதிக்க பட்டவங்க லிஸ்ட் ரொம்ப பெரிசு, சிலர் கிட்ட பேசும் போது நடைபிணமா வாழராங்கனு புரிஞ்சுது. கழுகுக் கூட்டம் சுத்துதேனு நீங்களும் கழுகா மாறிடாதீங்க.

ஆதரவுக்கு நன்றி.□□□

மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. Kindle, Nook, Android Tablets போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000 ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை PDF, EPUB, MOBI, AZW3. போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. *ProjectMadurai.com* எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஒர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் *PublicDomain*-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?

அமேசான் கிண்டில் கருவியில் தமிழ் ஆதரவு தந்த பிறகு, தமிழ் மின்னூல்கள் அங்கே விற்பனைக்குக் கிடைக்கின்றன. ஆனால் அவற்றை நாம் பதிவிறக்க இயலாது. வேறு யாருக்கும் பகிர இயலாது.

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும்,

சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் *Creative Commons* எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை "யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்" என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது "Creative Commons" எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் "All Rights Reserved" எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் "All Rights Reserved" என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை "Creative Commons" உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி

நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு நமக்கு
அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச்

செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை "மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்"-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

FREETAMILEBOOKS.COM

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

PDF for desktop, PDF for 6" devices, EPUB, AZW3, ODT

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம்(download) செய்து கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம்(download) செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை

எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல் போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.

அவ்வளவுதான்!

மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:

1. *ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை "Creative Commons" உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்*
2. *தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்*
3. *சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்*

விருப்பமுள்ளவர்கள் freetamilebooksteam@gmail.com எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்?

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தககங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாக பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், ebook reader ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.

இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப்

பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து *ebook reader* போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் *tablets* மற்றும் *ebook readers* போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

நகல் எடுப்பதை அனுமதிக்கும் வலைதளங்கள் ஏதேனும் தமிழில் உள்ளதா?

உள்ளது.

பின்வரும் தமிழில் உள்ள வலைதளங்கள் நகல் எடுப்பதினை அனுமதிக்கின்றன.

1. *http://www.vinavu.com*
2. *http://www.badriseshadri.in*
3. *http://maattru.com*

4. http://kaniyam.com

5. http://blog.ravidreams.net

எவ்வாறு ஓர் எழுத்தாளரிடம் CREATIVE COMMONS உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

<துவக்கம்>

உங்களது வலைத்தளம் அருமை [வலைதளத்தின் பெயர்].

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக Mobiles மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள் http://www.FreeTamilEbooks.com எனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான *Desktop,ebook readers like kindl, nook, mobiles, tablets with android, iOS* போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் *support* செய்யும் *odt, pdf, ebub, azw* போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள் உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை *"Creative Commons"* உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும்

அளிக்கிறோம்.

http://creativecommons.org/licenses/

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

e-mail : FREETAMILEBOOKSTEAM@GMAIL.COM

FB : https://www.facebook.com/FreeTamilEbooks

G plus: https://plus.google.com/communities/108817760492177970948

நன்றி.

</முடிவு>

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் *“Creative Commons License”*-ஐ

அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலைFREETAMILEBOOK-STEAM@GMAIL.COM எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது?

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும். அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம். அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி-I பகுதி-II என்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

தவிர்க்க வேண்டியவைகள் யாவை?

இனம், பாலியல் மற்றும் வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- *EMAIL : FREETAMILEBOOKSTEAM@GMAIL.COM*

- *Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks*
- *Google Plus: https://plus.google.com/communities/108817760492177970948*

இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?

குழு – *http://freetamilebooks.com/meet-the-team/*

SUPPORTED BY

கணியம் அறக்கட்டளை- *http://kaniyam.com/foundation*

தொலை நோக்கு – *Vision*

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழல்

பணி இலக்கு – *Mission*

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப,

தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

தற்போதைய செயல்கள்

- *கணியம் மின்னிதழ் – http://kaniyam.com/*
- *கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இலவச தமிழ் மின்னூல்கள் – http://FreeTamilEbooks.com*

கட்டற்ற மென்பொருட்கள்

- *உரை ஒலி மாற்றி – Text to Speech*
- *எழுத்துணரி – Optical Character Recognition*
- *விக்கிமூலத்துக்கான எழுத்துணரி*
- *மின்னூல்கள் கிண்டில் கருவிக்கு அனுப்புதல் – Send2Kindle*

* விக்கிப்பீடியாவிற்கான சிறு கருவிகள்
* மின்னூல்கள் உருவாக்கும் கருவி
* உரை ஒலி மாற்றி – இணைய செயலி
* சங்க இலக்கியம் – ஆன்டிராய்டு செயலி
* *FreeTamilEbooks* – ஆன்டிராய்டு செயலி
* *FreeTamilEbooks* – ஐஒஎஸ் செயலி
* *WikisourceEbooksReport*இந்திய மொழிகளுக்ககான விக்கிமூலம் மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்
* *FreeTamilEbooks.com – Download counter* மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்

அடுத்த திட்டங்கள்/மென்பொருட்கள்

- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- முழு நேர நிரலரை பணியமர்த்தி பல்வேறு கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்குதல்
- தமிழ் NLP க்கான பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல்
- கணியம் வாசகர் வட்டம் உருவாக்குதல்
- கட்டற்ற மென்பொருட்கள், கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் வளங்களை உருவாக்குபவர்களைக் கண்டறிந்து ஊக்குவித்தல்
- கணியம் இதழில் அதிக பங்களிப்பாளர்களை உருவாக்குதல், பயிற்சி அளித்தல்
- மின்னூலாக்கத்துக்கு ஒரு இணையதள செயலி
- எழுத்துணரிக்கு ஒரு இணையதள செயலி
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்

- http://OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்
- தமிழ்நாடு முழுவதையும் http://OpenStreetMap.org ல் வரைதல்
- குழந்தைக் கதைகளை ஒலி வடிவில் வழங்குதல்
- http://Ta.wiktionary.org ஐ ஒழுங்குபடுத்தி API க்கு தோதாக மாற்றுதல்
- http://Ta.wiktionary.org க்காக ஒலிப்பதிவு செய்யும் செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுத்துப் பிழைத்திருத்தி உருவாக்குதல்
- தமிழ் வேர்ச்சொல் காணும் கருவி உருவாக்குதல்
- எல்லா http://FreeTamilEbooks.com மின்னூல்களையும் Google Play Books, GoodReads.com ல் ஏற்றுதல்
- தமிழ் தட்டச்சு கற்க இணைய செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுதவும் படிக்கவும் கற்ற இணைய செயலி

உருவாக்குதல் (aamozish.com/Course_preface போல)

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், 100% வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும்.இந்த இணைப்பில் செயல்களையும், இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும்

மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், *GNU GPL, Apache, BSD, MIT, Mozilla* ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation

Account Number : 606 1010 100 502 79

Union Bank Of India

West Tambaram, Chennai

IFSC – UBIN0560618

Account Type : Current Account

UPI செயலிகளுக்கான QR Code

BHIM UPI Payments Accepted at

Kaniyam Foundation

Account Number : 606101010050279, IFSC Code: UBIN0560618

Scan and Pay using any UPI supported Apps

குறிப்பு: *சில UPI* செயலிகளில் இந்த *QR Code* வேலை செய்யாமல் போகலாம். அச்சமயம் மேலே உள்ள வங்கிக் கணக்கு எண், *IFSC code* ஐ பயன்படுத்தவும்.

Note: Sometimes UPI does not work properly, in that case kindly use Account number and IFSC code for internet banking.